**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**அ.வ.எண்.48/2024**

**தேதி : 20.04.2026**

**(பி.வா.சா.1 ) – திரு . சுப்பிரமணி**

**சாட்சி அழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை :– (வாதி தரப்பில்)**

1. வழக்குச் சொத்து எந்த கிராமத்தில் உள்ளது என்றால் கோதைமங்கலம் கிராமத்தில் உள்ளது. யார் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று கேட்டால் எனக்குத் தெரியாது. இந்த வழக்கில் நான் வழக்கறிஞர் மூலம் முன்னிலையாகி எதிர்வாதம் செய்துள்ள விபரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியும். முன்பு பச்சைமுத்து என்பவர் மூன்று பேர் மீது வழக்கு தாக்கல் செய்தார். இந்த வழக்கை தாக்கல் செய்துள்ள வாதிகள் இதற்கு முன்பாக வேறு வழக்குகள் தாக்கல் செய்தார்களா என்றால் எனக்குத் தெரியாது.

2. வழக்குச் சொத்து எனது சொத்துக்கு தென்புறம் உள்ளதா வடபுறம் உள்ளதா என்றால் எனது சொத்துக்கும் வடபுறம் மற்றும் மேற்குப்புறம் உள்ளது. வழக்குச் சொத்தை 1967ம் வருடத்திலேயே பச்சைமுத்துக் கவுண்டர் என்பவர் வாங்கிவிட்டார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. காளியப்பகவுண்டர் மகன் பச்சைமுத்து அவர்கள் 10.09.1967ம் தேதியன்று பழனிச்சாமிக்கவுண்டரிடமிருந்து கிரையம் பெற்றுள்ளார் என்றால் அதைப் பற்றி எனக்குத் தெரியாது. எனது சொத்தை பழனிச்சாமிக்கவுண்டரிடமிருந்து எனது தாயார் 1989ம் ஆண்டு கிரையம் பெற்றுள்ளார். அதில் நான்குமால் போட்டுள்ளோம்.

3. மேற்படி பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் வடக்கு பச்சைமுத்து காலியிடம் என உள்ளது என்றால் சரிதான். அந்தச் சொத்துதான் வழக்குச் சொத்து என்றால் எனக்குத் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பற்றிய விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் வழக்குச் சொத்துக்குச் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் என்றால் சரிதான். என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.வா.சா.ஆ.2 ஆவணம் பற்றி எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. பி.வா.சா.ஆ.3 அ.வ.எண்.611/1999 வழக்கில்

தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரை சம்பந்தப்பட்ட வழக்கை யார் தாக்கல் செய்தார் என்றால் பச்சைமுத்து மகனோ, மருமகனோ தாக்கல் செய்துள்ளார்கள், எனக்குத் தெரியாது. அந்த வழக்கில் இந்த வழக்கின் வாதிகள் தரப்பினர்கள் அல்ல என்றால் எனக்குத் தெரியாது.

4. வழக்குச் சொத்தில் நான், குருசாமி, ராமசாமி, முருகேசன், அரவிந்த் ஆகியோர் சுமார் 6500 சதுரடியை ஆக்கிரமித்து வைத்துள்ளதாகச் சொன்னால் சரியல்ல, மேற்படி சொத்து நாங்கள் சம்பாதித்து வாங்கியது. அ.வ.எண்.611/1999 வழக்கை 1ம் பிரதிவாதி எங்கள் மீது தாக்கல் செய்தார் என்றும், 1ம் பிரதிவாதியும், நாங்களும் கூட்டுச்சேர்ந்துகொண்டு வாதிகளுக்குரிய பாகத்தை பிரித்துக்கொடுக்காமல் இருந்து வருவதாகச் சொன்னால் சரியல்ல. காளிமுத்துக்கவுண்டர் மகன் பச்சைமுத்துக்கவுண்டர் என்பவருக்கு மூன்று வாரிசுகள் என்றால் எனக்குத் தெரியாது.

5. வாதிகள் இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கில் நான் என்ன எதிர்வாதம் செய்துள்ளேன் என்றால் எனக்குத் தெரியாது. என்ன வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்று தெரியாமல் நான் வாதிகளின் இடத்தை ஆக்கிரமிப்பு செய்துகொண்டு பொய்யாக எதிர்வாதம் செய்து வருவதாகச் சொன்னால் சரியல்ல. என்னுடைய இடம் என்று சொல்வதற்கு பட்டா ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பி.வா.சா.ஆ.6 பட்டா கூட்டுப்பட்டாவாக உள்ளது என்றால் சரிதான்.

6. என்னுடைய இடத்தை இதுவரை தனியாக அளந்து உட்பிரிவு செய்யவில்லை என்றால் சரிதான். தற்போதும் பட்டா என் தாயாரின் பெயரில்தான் உள்ளது என்றும், என்னுடைய பெயரில் இல்லை என்றும் சொன்னால் சரிதான். என் தாயார் இறந்துவிட்டார். என்னுடைய தாயார் இறந்து சுமார் 20 வருடங்கள் இருக்கும். 20 வருடகாலமாக என்னுடைய பெயருக்கு பட்டா மாறுதல் செய்யவில்லை என்றால் சரிதான். மின் இணைப்பு மற்றும் வீட்டுவரி முதலானவை என் தாயார் பெயரில்தான் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் வாதிகளுக்கு சட்டப்படியான பாகம் உள்ளது என்றும், நான் ஆக்கிரமிப்பு செய்துகொண்டு வாதிகளுக்கு சொத்தை பிரித்துக்கொடுக்காமல் இருந்து வருகிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**என்னுடைய தாயார் முறையாக அளந்து பட்டா பெற்றுக்கொள்ளாமல் வாதிகளின் இடத்தை ஆக்கிரமித்துக்கொண்டுள்ளார் என்றால் சரியல்ல.**

**<u>மறு விசாரணை</u> :– இல்லை.**

Taken down by me in open court and read over to the witness in Tamil and acknowledged by him/her to be correct.

K. BHARATHI
Digitally signed by K. BHARATHI
Date: 2026.04.20 18:25:28 +0530

Additional Sub Judge,
Palani.